
**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர்: 2 இதழ் (2), 2023**

**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத்தரப்புத்தக எண்: 978819 4845959**
**இணையதளம்: https://restpublisher.com/book-series/ctll/**
**DOI: https://doi.org/10.46632/ctll/4/1/2**




# "லியோ' சிறுகதைகளில் காணப்படும் சமூக நலக்கூறுகள்

**கு. ஞானகுரு**
*தாகூர் அரசு கலை & அறிவியல் கல்லூரி, புதுச்சேரி, தமிழ்நாடு, இந்தியா.*
மின்னஞ்சல்: Gnanamthagore@gmail.com

**முன்னுரை:** கன்னியாகுமரி மாவட்டத்தில் நாஞ்சில்நாடு எனப்படும் நாகர்கோவில் நகரைச்சுற்றியுள்ள சிறு நிலப்பரப்பைவிட பரப்பளவில் பெரிதான மேற்குமாவட்ட பகுதிகளான கல்குளம், திருவட்டாறு, விளவங்கோடு, கல்குளம் ஆகிய நான்கு தாலுக்கா பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகள் பண்டைய வேணாட்டின் கலாச்சாரத்தை இன்றளவும் பிரதிபலிக்கின்றன. இத்தகைய குமரியின் பெரும் நிலப்பரப்பு மக்களின் வாழ்வியல் கதைகளை சொல்கிறது லியோவின் 'கிணற்றில் விழுந்த தீண்டாமை" என்னும் சிறுகதைத் தொகுப்பு. படைப்பாளி லியோ 1982 ஆண்டு குமரிமாவட்டம் திருவட்டாரை அடுத்த திருவரம்பு எனும் ஊரில் பிறந்தவர், சிறு குறு கவிதைகள் எழுதிவந்த இவரது முதல் கதைப்படைப்பு “கிணற்றில் விழுந்த தீண்டாமை” ஆகும். இதில் பத்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இது தவிர ‘திணை’ காலாண்டிதழிலும் தொடர்ந்து கதை, கவிதை எழுதி வருகிறார். தமிழகத்தின் மற்ற வட்டாரங்களை விட ஏன் குமரியில் உள்ள நாஞ்சில் வட்டாரத்தை விட முற்றிலும் மாறுபட்ட கலாச்சார பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்கள் வாழும் பகுதி, நில அமைப்பிலும் கேரள பகுதியுடன் இணைந்து காணப்படுகிறது, இதற்கு சாட்சியாக குமரி மாவட்டத்தின் கடல் எல்லை எண்பது சதவீதத்திற்கு மேல் அரபிக்கடலின் கரையில் வருவதே சிறந்த உதாரணம் ஆகும். இவ்வாறான மாறுபட்ட கதைக்களத்திலிருந்து எழுதப்பட்ட சிறுகதைகளில் சமூக நலக்கூறுகள் இயல்பாக இயற்கையோடு இணைந்து காணப்படுவதை படைப்பாளி லியோவின் புனைவு வெளியினூடாக அறியத் தருகிறது இக்கட்டுரை.

## 1. கதைகளில் வெளிப்படும் சமூக நலக்கூறுகள்

படைப்பாளர் லியோ சிறுகதைத் தொகுப்பின் முதல் கதையான ‘பலிஆடு’ வடகிழக்குப் பருவமழையின் தாக்கத்திலிருந்துதான் தொடங்குகிறது. மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்யும் மழையினால் சூரிய வெளிச்சத்தையே பார்க்க முடியவில்லை என்று லியோ கூறுகிறார். அடைமழை பெய்தாலும் வெள்ளத்தினால் எளிதில் பாதிப்படையாத வகையில் மேடு பள்ளம் நிறைந்த நிலஅமைப்பை அந்தபகுதி பெற்றிருக்கிறது என்பதும் எடுத்தியம்பப்படுகிறது. ஆனாலும் மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்யும் அடை மழையினால் பேச்சிப்பாறை அணை நிரம்பி கோதையாற்றில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது, குமரி மாவட்டம் கண்டிராத பேரழிவான வெள்ளப்பெருக்கு கரைகடந்து பல விவசாய நிலங்களையும், செங்கல் சூளைகளையும், மக்களின் வீடுகளையும் அடித்துச் செல்கிறது. கதை நாயகனான மனோகரனின் வீடும் அடித்துச் செல்லப்படுகிறது, அவன் தாய்கிழவி ஒப்பாரி வைத்து அழுகிறாள் அந்த சோகமான நிகழ்வின்

மத்தியிலும் கதை நாயகன் மனோகரன் நண்பர்களுடன் இணைந்து களப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். வெள்ளப்பெருக்கு குறித்த சேதிகளை விசாரித்து மக்களை எச்சரிக்கை செய்து, மீட்பு பணிகளில் முழுமையாக தானும் தன்னைச் சேர்ந்தவர்களோடு ஈடுபட்டு இரவு தூங்காமல் விழித்திருந்து தனது துக்கநிலையை மறந்து பொதுமக்களின் உயிரையும் உடைமையையும் காப்பாற்றும் நேர்மையான, உணர்வுப்பூர்வமான நிகழ்வு எடுத்தியம்பப்படுகிறது. இன்றைய பரபரப்பான உலக வாழ்வினூடாக வெளிப்படும் ஒரு இளைஞனின் மனநிலையை, மனிதத்தை நுவல்வதாக அமைகிறது இக்கதை.

'கிணற்றில் விழுந்த தீண்டாமை' கதையில் வரும் நம்பியாரின் வீட்டிற்கு செல்வம் சேர்த்துக் கொடுப்பது தங்கப்பன், அவன் மனைவி மற்றும் அவன் பிள்ளைகள் தான். தங்கப்பனின் உழைப்பின் பலனை நம்பியாரின் குடும்பமே அனுபவித்தது. ஆனால் தங்கப்பன் தீண்டத்தகாதவன், வீட்டிற்குள் அனுமதியில்லை, தங்கப்பன் சாப்பிட தனி பாத்திரம், தம்ளர் கொடுக்கப்பட்டிருந்தது, அதையும் மாட்டுத்தொழுவத்தில் சொருகி வைக்க வேண்டும். இவ்வாறு நடத்தப்படும் தங்கப்பன்தான் கிணற்றில் தவறி விழும் நம்பியாரின் மனைவி லெட்சுமியம்மாளைத் தொட்டு தூக்கி கிணற்றிலிருந்து வெளியே கொண்டுவருகிறான். தீண்டாமையைப் பரிகாரங்களின் மூலமாக நீக்கிக் கொள்ளமுடியும் என நம்பப்பட்டும், செய்யப்பட்டும் வரும் இன்றைய காலச்சூழலில், தீட்டு என்பது கற்பிக்கப்பட்ட ஒன்றே அது நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்புடையது அல்ல என்பதை இக்கதையில் வரும் தங்கப்பன் நிறுவி காட்டியுள்ளார். காப்பாற்றப்பட்ட லெட்சுமியம்மாளும் அவளது கணவர் நம்பியாரும் இந்த உண்மையை ஒத்துக்கொண்டனர் என்பதை தங்கப்பனுக்கு வீட்டில் தேநீர் கொடுப்பதும், தங்கப்பன் தேநீர் குடித்த தம்ளரை லெட்சுமியம்மாள் கழுவுவதின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயிரைக் காப்பாற்ற முனையும்போது தீண்டாமை வேலை செய்யாது என்றால் அது ஏன் சமூக வாழ்க்கையில் தொடர்ந்து பல்வேறு வடிவங்களால் தூக்கிப்பிடிக்கப்படுகிறது என்ற கேள்வியை இந்தக் கதை முன்வைப்பதோடு, ஆபத்துக்காலங்களில் செய்யப்படும் உதவியினால் தீண்டாமை உணர்வு மறைந்து புதிய நட்புறவு ஏற்படுகிறது எனும் மனிதநேய புரட்சி லியோவினால் கூறப்படுகிறது,

'தோழர்கள்' எனும் கதையில் உள்ளாட்சித் தேர்தலில் கேசவபுரம் ஊராட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ராமசாமி, மைக்கேல்ராஜ் விருப்பமனு கொடுக்கின்றனர். பகுதி செயலாளர் முத்தையா யாரைச் சுட்டிக்காட்டுகிறாரோ அவர்தான் வேட்பாளர். முத்தையா இரண்டுபேரையும் எடை போட்டுப்பார்த்தார். மைக்கேல்ராஜ் துடிப்பான இளைஞன், பட்டப் படிப்பு படித்தவன், இவனை வளர்த்துவிட்டால் நமது காலத்திற்குப் பிறகும் கட்சி வலுவாக இருக்கும் என்று கருதி தனது உயிர்நண்பனை புறந்தள்ளி தொலைநோக்குப் பார்வையோடு மைக்கேல்ராஜ் பெயரை பரிந்துரைக்கிறார். இந்த கதையில் தோழர்.முத்தையாவின் வேட்பாளர் தேர்வு எதிர்கால மக்களுக்கான பயன்படும் அரசியல் அறம் சார்ந்த தொலைநோக்கு பார்வையைச் சுட்டுவதுடன், சமகால அரசியலில் இளைஞர்களின் தவிர்க்க இயலா பங்களிப்பின் தேவையையும் ஆசிரியர் நன்கு புரிந்துள்ளமை வெளிப்படுகிறது.

'இரட்டை வாழ்க்கை' கதையில் மீனாட்சியைக் காதலித்து ரகசியத் திருமணம் செய்துவிட்டு தகப்பனின் வற்புறுத்தலுக்காக இரண்டாம் கல்யாணம் செய்யப்போகிறான் என்பதை

அறிந்து மீனாட்சி அதிர்ச்சியடைகிறாள். ஆனாலும் அவன் திருமணம் செய்யப்போகும் பெண் ஏழை முதிர்கன்னி மட்டுமல்லாமல் ஒரு ஊமை என்பதை அறிந்து தனது கோபத்தையும், மனவருத்தத்தையும் மனதிற்குள் புதைத்துவிட்டு கணவனின் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் தன்னை சுயம் மறைத்து கண்ணீரோடு

கணவனின் திருமணத்தை ஏற்றுக்கொள்கிறாள். இதில் அவள் கணவன் மீது கொண்டிருக்கும் அளவற்ற அன்பும், ஒரு ஏழை ஊமைப்பெண்ணிற்கு தனது கணவன் மூலம் வாழ்க்கை கிடைக்கிறதே எனும் இரக்கமும் வெளிப்படுகிறது. ஆசிரியரின் துணிச்சலான இக்கதைக்கரு சமூகத்தில் கண்டுகொள்ளப்படாத, கவனிக்கப்படாத நபர்களின்மீதான அவரின் கவனங்கொள்ளளையே உணர்த்துகிறது.

'பட்டாளத்தான்" கதையில் வாழ்க்கையில் எவ்வித லட்சியமும் இன்றி குடிகார கணவனுடன் அல்லாடும் அபலைப்பெண்ணின் வாழ்வியல் நிகழ்வுகள் கூறப்படுகிறது. தனது கணவன் எப்படிப்பட்ட குடிகாரனாக இருந்தாலும் அவனை நேசிப்பவளாக பட்டாளத்தான் மனைவி கதாபாத்திரம் அமைகிறது. 'வளர்மதி' கதைகளமும் அவ்வாறுதான் வேலைநிமித்தமாக வெளிநாட்டில் வாழும் கணவனிடம் மனைவி கொண்டிருக்கும் காதலும், விசுவாசமும் கூறப்படுகிறது. கதைநாயகி 'வளர்மதி' தான் வெளிநாட்டுகாரனின் மனைவி எனும் அகந்தை சிறிதும் இல்லாமல் ஆடு மேய்க்கும் மூதாட்டியான குருவம்மா பாட்டியுடன் கொண்டிருக்கும் உண்மையான அன்பும் நட்பும் இயல்பாக வெளிப்படுகிறது.

## 2. சமூகவியல் சிந்தனை

'கிணற்றில் விழுந்த தீண்டாமை' கதை மழையை மையப்படுத்தி தான் நகர்கிறது, வானிலை அறிக்கைகள் அறிவிக்கப்படாத 1950-களிலேயே மழைக்காலம் துவங்குவதை கிராமத்து மக்கள் கணித்து தங்கள் குடிநீர் ஆதாரமான கிணற்றை தூர்வாரி சுத்தப்படுத்தப்படுவது சொல்லப்படுகிறது. 'மொளவெட்டி முத்துராசு' எனும் கதையில் ஆனி மாதம் குளிர்ந்த காற்றோடு சாரலாகப் பெய்யும் தென்மேற்கு பருவமழை சொல்லப்படுகிறது, 'பலிஆடு' கதையில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது வடகிழக்கு பருவமழையினால். இதன்மூலம் இக்கதையின் களமான குமரிமாவட்டம் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு ஆகிய இரு பருவ மழைகளும் கிடைக்கப்பெறும் பகுதி என்பது உறுதியாகிறது. கோதையாற்றில் ஏற்படும் பெருவெள்ளப்பெருக்கினால் மக்களின் வாழ்வாதாரம் எவ்வாறு சீர்குலைகிறது என்பது சொல்லப்பட்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணையில் அதிக நீர் சேமித்து வைத்தால் கோடைக்காலத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற அரசாங்கத்தின் திட்டத்தை அடைமழை எவ்வாறு சீர்குலைத்தது என்பதும் சொல்லப்படுகிறது. மேலும் அந்தச் சோக சூழலிலும் இளைஞர்கள் வெள்ளப்பெருக்கில் மிதந்து வரும் பல்வேறு பொருட்களை தங்கள் உயிரைப் பணயம் வைத்து சாகசம் செய்து மீட்டெடுப்பது கிராமப்புற இளைஞர்களின் இயல்பையும் வீரத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

வளர்மதி' கதையில் சுறுசுறுப்பாக வேலைகள் செய்யும் இளம்பெண் வளர்மதி வயல் வேலைகள் செய்வதிலும் சளைத்தவளல்ல என்பதைச் சொல்கிறது. 'Boul' கதையில் வியாபாரியான பொன்னுமணி பெருவட்டர் தனது சொந்த விளைபலன்களோடு சந்தைக்கு சென்று விற்பவர் ஆவார். இதனால் இடைத்தரகர் இல்லாத விவசாயமும் வியாபாரமும் சொல்லப்படுகிறது.

'திணை' காலாண்டிதழில் வெளிவந்துள்ள சிறுகதையான 'ஜெபமணி ஜார்ஜ்' எனும் சிறுகதையானது வயதான காலத்தில் மனைவி, மகனால் கைவிடப்படும் ஒரு முதியவரின் வாழ்வியல் வலிகளைச் சொல்கிறது. நடை தளர்ந்தாலும் மனந்தளராமல் தன்னம்பிக்கையோடு சோப்பு விற்று பிழைக்கும் ஜெபமணி ஜார்ஜ் எனும் அந்த முதியவரின் போராட்ட வாழ்வியலோடு குடும்ப அமைப்புகளின் சிக்கலும் சொல்லப்படுகிறது.

## 3. முடிவுரை

இவ்வாறு மனிதர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து காணப்படும் இயல்பான மனித உணர்வுகள், மனிதநேய பண்புகள், ஆகியவை பல்வேறு சூழல்களில் வெளிப்படுவதை லியோவின் சிறுகதைகளில் காணமுடிகிறது. அவை இயற்கை சீற்றத்தில் வெளிப்படும் மனிதநேயம், இல்லறப்பெண்களின் மனிதநேய மாண்புகள், அரசியலில் மனிதமாண்பு, தீண்டாமையை வென்ற மனிதநேயம், இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்வு சார்ந்த சமூகவியல் கூறுகள் என குமரி மேற்கு மாவட்ட மக்களின் வாழ்வியல் சூழல் சார்ந்த மனிதநேய மாண்புகளை லியோ எளிமையாக எடுத்தியம்பியுள்ளமை புலனாகிறது. தொலைந்துபோய்க் கொண்டிருக்கிர மனித மான்புகளை கதைவோட்ட நெடுகிலும் கனமான பாத்திர வார்ப்பின்மூலம் இக்காலத்திற்கு ஏற்புடைய தொகுப்பாக படைத்தளித்திருக்கிறார் எழுத்தாளர் லியோ. அந்தவகையில் தவிர்க்க இயலா படைப்பாக மாறிவிடுகிறது இச்சிறுகதைத் தொகுப்பு.

## பார்வை நூல்கள்

1. கிணற்றில் விழுந்த தீண்டாமை சிறுகதைத்தொகுப்பு, திருவரம்பு லியோ.
2. திணை காலாண்டிதழ், செப் 2022- பெப் 2023.